நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, B.A, L.L.B.,

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு மார்ச் 23–ம் நாள் திங்கட்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 09–ம் நாள்

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 491/2025

அரசுக்காக,
உதவி காவல் ஆய்வாளர்,
அச்சிறுப்பாக்கம் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.172/2022 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

A1– மைக்கேல், த/பெ.முத்தால்,
கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
செய்யூர் தாலூக்கா.
A2 – மதன் @ குணசேகரன், த/பெ.மைக்கேல்,
கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
செய்யூர் தாலூக்கா.
A3 – சரஸ்வதி, க/பெ.மைக்கேல்,
கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
செய்யூர் தாலூக்கா.
A4 – காத்தவராயன், த/பெ.அன்பழகன்,
கொளத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
செய்யூர் தாலூக்கா.

........ எதிரிகள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 23.03.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 493/2025<br>TNCG15-002779-2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Acharapakkam Police Station.<br>**Complainant** |
| | | A1– மைக்கேல், த/பெ.முத்தால்<br>,A2 – மதன் @ குணசேகரன், த/பெ.மைக்கேல்,<br>A3 – சரஸ்வதி, க/பெ.மைக்கேல்,<br>A4 – காத்தவராயன், த/பெ.அன்பழகன், |

| | | Accused |
|---|---|---|
| 6. | Date of Occurrence | 15.05.2022 |
| 7. | Date of Complaint | 18.05.2022 |
| 8. | Date of Arrest if any and remand | ----- |
| 9. | Period of Remand of the Accused | ----- |
| 10. | Date of release on bail | ----- |
| 11. | Date of Final Report | 01.07.2024 |
| 12. | Date of Committal of the case to the Court of Sessions | ------- |
| 13. | Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha Sanhita | 12.01.2026 |
| 14. | Date of Examination in Chief and Cross Examination of the Witnesses | Witness / Chief / Cross:<br>PW1 12.02.2026 12.02.2026<br>PW2 12.02.2026 12.02.2026<br>PW3 12.02.2026 12.02.2026<br>PW4 26.02.2026 26.02.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS | ------ |
| 16. | Date of Examination of the Accused U/s.351 of BNSS Act | 09.03.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance / production as the case may be | Nil |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | ------ |
| 19. | Date of Commencement of Trial | 12.01.2026 |
| 20. | Date of Closure of Trial | 13.03.2026 |
| 21. | Date of Sentence of Order | 23.03.2026 |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | ------ |
| 23. | If any delay, give Explanation | ------ |

Witness table for item 14:

| Witness | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 12.02.2026 | 12.02.2026 |
| PW2 | 12.02.2026 | 12.02.2026 |
| PW3 | 12.02.2026 | 12.02.2026 |
| PW4 | 26.02.2026 | 26.02.2026 |

****

இவ்வழக்கானது 28.11.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 491/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 23.03.2026-ம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும்,

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அய்யனாரப்பன் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**1.** இவ்வழக்கானது இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) IPC r/w 4 TNPHW Act–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**2. குற்றமுறையீட்டின் சுருக்கம்:**

இவ்வழக்கில் கடந்த 15.05.2022ம் தேதி மதியம் 04.45 மணியளவில் அ.கொளத்தூர் கிராமத்தில் மாரியம்மன் கோவில் தெருவில் சாட்சி கனகா என்பவரின் வீட்டிற்கு முன்பு வந்து 1 முதல் 4 வரையிலான எதிரிகள் அசிங்கமாக திட்டி கொண்டிருந்தவர்களிடம் சாட்சி கீர்த்திகா மற்றும் சாட்சி கனகா இருவரும் மேற்படி எதிரிகளிடம் ஏன் இங்கு வந்து அசிங்கமாக திட்டிக் கொண்டு இருக்கறீர்கள் என்று கேட்டதற்கு 1ம் எதிரி மைக்கேல் என்பவர் சாட்சி கனகாவின் தலை முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கையால் கன்னத்தில் அடித்துள்ளார். 2ம் எதிரி மதன் @ குணசேகரன் என்பவர் சாட்சி கீர்த்திகாவை அசிங்கமாக திட்டி கையால் கன்னத்தில் அடித்துள்ளார். 3ம் எதிரி சரஸ்வதி மற்றும் 4ம் எதிரி காத்தவராயன் இருவரும் சேர்ந்து அசிங்கமாக திட்டி அடித்துள்ளார்கள். தகவல் அறிந்து வந்த ராம்குமார் என்பவரை பார்த்து 1 முதல் 4 வரையிலான எதிரிகள் அனைவரும் சேர்ந்து கையால் அடித்து இனிமேல் இந்த ஊருக்கு வரகூடாது வந்தால் உன்னை அடிச்சு சாவடித்திடுவோம் என கொலை மிரட்டல் செய்துள்ளார்கள். மேற்படி சம்பவத்தின் சாட்சி கனகா என்பவருக்கு உடம்பில் சொற்பகாயம் ஏற்பட்டுள்ளது. எனவே 1, 2 மற்றும் 4 எதிரிகள் 294(b), 323, 506(1) of IPC r/w 4 of TNPHW Act–ன் கீழும், 3ம் எதிரி 294(b), 323, 506(1) of IPC தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுைறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 28.11.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் முன்பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள்

ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSS ன் கீழ் குற்றப்பத்திரிகை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிகளின் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) IPC r/w 4 TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டுகளை குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்ற பட்டியல் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் விட்டொழிக்கப்பட்டனர். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**5.** அரசு தரப்பில், அ.சா.1 கீர்த்திகா என்பவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது உத்தமநல்லூரில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தான் தனது அம்மா கனகா மற்றும் தன் கணவர் ராம்குமார் ஆகியோர் தங்கள் வீட்டிற்குள் தாங்கள் சண்டை போட்டுக்கொண்டோம் என்றும், பின்னர் போலிசார் வந்து வெள்ளை தாளில் தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும்

தன்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன் என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் 2022ம் வருடம் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் நந்தகுமார் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும் என்றும், தற்போது அவர் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று தற்போது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வரும், அ.சா.4 மகாராணி என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 18.05.2022 ம் தேதி மதியம் 2.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் நந்தகுமார் நிலைய பொறுப்பில் இருந்தபோது கீர்த்திகா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 172/2022 இதச பிரிவுகள் 294(b), 323 மற்றும் r/w 4 TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் நந்தினி மற்றும் செல்வராணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கில் காயம்பட்ட நபருக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய மருத்தவர்கள் ஜெபசீலி என்பவரை விசாரித்து அறிக்கையை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்து வழக்கின் சட்டப்பிரிவான இதச பிரிவுகள் 294(b), 323 மற்றும் 4 of TNPHW Act ல் இருந்து இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act ஆக சட்டப்பிரிவு மாற்றி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் எதிரி தலைமறைவானதால் வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் 351(1)(ஆ) BNSS–ன் கீழ் வினவிய போது எதிரிகள் அதனை மறுத்து கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ

முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) IPC r/w 4 TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு :–</u>**

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலாளன சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ 1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தபட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா ? என்பதே ஆகும்.

**10.** **அ.சா.1** கீர்த்திகா என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். **அ.சா.1** கொடுத்ததாக சொல்லப்படும் புகார் **அ.சா.ஆ.2** ஐ பரிசீலிக்கையில் தனது அம்மா ஊரான கொளத்தூரில் தான் இருந்து வருகிறேன் என்றும், இன்று 15.05.2022 ம் தேதி காலை சுமார் 08.00 மணி அளவில் தனது அம்மா வீட்டில் தானும், தனது அம்மா கனகாவும் இருந்தபோது கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மதன் என்கிற குணசேகரன், மைக்கேல், சரஸ்வதி, காத்தவராயன் ஆகியோர் தனது வீட்டின் எதிரே வந்து அதிகமாக திட்டிக் கொண்டிருந்தார்கள் என்றும், தானும் தனது அம்மா கனகாவும் ஏன் அசிங்கமாக திட்டிக் இருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு மைக்கேல் என்பவர் தன் அம்மா முடியை பிடித்து இழுத்து கீழே தள்ளி கழுத்தில் அடித்தார் என்றும், மதன் என்கிற குணசேகரன் தன்னை அசிங்கமாக திட்டி கன்னத்தில் அறைந்தான் என்றும், பின்பு சரஸ்வதி, காத்தவராயன் இருவரும் சேர்ந்து தன்னையும், தன் அம்மாவையும்

அசிங்கமாக திட்டி அடித்தார்கள் என்றும், பின் தான் தன் கணவர் ராம்குமார் என்பவருக்கு செல்போன் மூலமாக தகவல் கொடுத்தேன் என்றும், பின்பு அவர் தனது அம்மாவின் ஊரான கொளத்தூருக்கு வரும்போது மைக்கேல், மதன், காத்தவராயன், சரஸ்வதி ஆகியோர் கும்பலாக வந்து அடித்து "இவன் இனிமேல் இந்த ஊருக்கு வரக்கூடாது" என்று கொலை வெறி தாக்குதல் நடத்தினார்கள் என்றும், பின்பு தன் அம்மாவை அங்கிருந்து அச்சரப்பாக்கம் அரசு மருத்துவமனை கொண்டு சென்று சேர்த்து அங்கிருந்து மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அ.சா.1 அவரது சாட்சியத்தில் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் தனது அம்மா கனகா மற்றும் தன் கணவர் ராம்குமார் ஆகியோர் தங்கள் வீட்டிற்குள் சண்டை போட்டுக் கொண்டோம் என்றும், பின்னர் போலிஸார் வந்து வெள்ளை தாளில் தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றும், தான் கையொப்பம் போட்டேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்று வழக்கின் ஆணிவேரான புகாரையே மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ஐ பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அனுமதிக்கப்பட்ட போதும் எவ்வித முரண்பாடும் வெளிகொணரபடவில்லை.

**11.** அ.சா.2 கனகா என்பவர் அவரது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலிஸார் தன்னை விசாரிக்கவில்லை என்று முற்றிலும் அரசு தரப்பில் இருந்து பிறழ்ந்து பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். அவரை குறுக்கு செய்த போதும் எவ்வித முரண்பாடும் வெளிகொணரபடவில்லை.

**12.** அ.சா.3 ராம்குமார் என்பவர் அவரது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளது அரசு தரப்பிற்கு பாதகமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றினை அ.சா.ஆ.6 ஐ பரிசீலிக்கையில் கடந்த 15.05.2022 ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் சாட்சி கனகா என்பவருக்கு தெரிந்த 5 நபர்கள் அவரை கை மற்றும் தடியால் அடித்ததாகவும் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கப்பட்டுள்ளது தெரிய வரும்

நிலையில், மேற்படி அ.சா.2 கனகா வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளது அரசு தரப்பிற்கு பாதகமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.நந்தகுமார் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும் என்றும், தற்போது அவர் பணி ஓய்வு பெற்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வரும், அ.சா.4 மகாராணி என்பவர் மேற்படி புலன் விசாரணை அதிகாரி புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று புலன் விசாரணை செய்து எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** மேலும் அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.1 எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3) BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.130/2026–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**15.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அவசியமற்றது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16.** இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.**1** அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.நந்தகுமார்

என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, புலன்விசாரணை செய்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.4 மகாராணி என்பவரின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** இந்த வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் எவரும் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ அசிங்கமாக பேசியதாகவோ, அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் பெண்மையை இழிவுப்படுத்தும் வகையில் நடந்து கொண்டதாகவோ, எதிரிகள் தாக்கியதால் அ.சா.2 க்கு சொற்பகாயம் ஏற்பட்டதாகவோ, அ.சா.3 க்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, இந்த வழக்கில் புலன்விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சாட்சியத்தினை மட்டும் வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்து விட்டதாக இந்நீதிமன்றம் கருத இயலாது. எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act–ன் கீழான குற்றச்சாட்டுகள் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை விடுதலை செய்வது நீதியின் பால் உகந்தது என கருதி அவ்வாறே தீர்மானித்து, மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**18.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 323, 506(1) மற்றும் 4 of TNPHW Act–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**19.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, அதுகுறித்து எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**20.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரிகள் பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 18:09:27 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.

<u>அரசு தரப்புச் சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | கீர்த்திகா, க/பெ.ராம்குமார் |
| அ.சா.2 | கனகா, த/பெ.தனசேகர் |
| அ.சா.3 | ராம்குமார், த/பெ.ராமலிங்கம் |
| அ.சா.4 | மகாராணி க/பெ.டேனியல் |

<u>அரசு தரப்புச் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் | அ.சா.1 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | புகார் மனு | அ.சா.4 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் | அ.சா.4 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.4 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.6 | விபத்து பதிவேடுடன் கூடிய | அ.சா.4 ஆல் குறியீடு |

| | | |
|---|---|---|
| | காயச்சான்று | செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.7 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.4 ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

<u>அரசு தரப்புச் சான்றுப்பொருள் :</u> இல்லை.

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:</u> இல்லை.

<u>குறிப்பு:</u>

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.03.23 18:09:34 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.